# பெப்ரவரி – 22 – வியாழன்

### திருத்தூதர் பேதுருவின் தலைமைப் பீடம்

### ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை. திபா. 23:1

## முதல் வாசகம் : 1 பேதுரு 5 : 1 – 4

சகோதர சகோதரிகளே! கிறிஸ்துவின் துன்பங்களுக்குச் சாட்சியும், வெளிப்படவிருக்கும் மாட்சியில் பங்கு கொள்ளப் போகிறவனுமாகிய நான், உடன்மூப்பன் என்னும் முறையில் மூப்பர்களுக்குக் கூறும் அறிவுரை. உங்கள் பொறுப்பிலிருக்கும் கடவுளின் மந்தையை நீங்கள் மேய்த்துப் பேணுங்கள் கட்டாயத்தினால் அல்ல, கடவுளுக்கேற்ப மன உவப்புடன் மேற்பார்வை செய்யுங்கள் ஊதியத்திற்காகச் செய்யாமல், விருப்போடு பணி செய்யுங்கள்.உங்களிடம் ஒப்படைக்கப் பட்டவர்களை அடக்கி ஆளாமல் மந்தைக்கு முன்மாதிரிகளாய் இருங்கள்.தலைமை ஆயர் வெளிப்படும்போது, அழியா மாட்சியுள்ள முடியைப் பெற்றுக்கொள்வீர்கள்.

**பதில்பாடல்:** ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை

## நற்செய்தி : மத்தேயு16 : 13 – 19

அக்காலத்தில் இயேசு, பிலிப்புச் செசரியா பகுதிக்குச் சென்றார். அவர் தம் சீடரை நோக்கி, "மானிடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?" என்று கேட்டார்.அதற்கு அவர்கள், "சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் வேறு சிலர் எலியா எனவும் மற்றும் சிலர் எரேமியா அல்லது பிற இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்கின்றனர்" என்றார்கள்."ஆனால் நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?" என்று அவர் கேட்டார்.சீமோன் பேதுரு மறுமொழியாக, "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று உரைத்தார். அதற்கு இயேசு, "யோனாவின் மகனான சீமோனே, நீ பேறு பெற்றவன்.ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. மாறாகஇ விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார்.எனவே நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுருஂ இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா.விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" என்றார்.

**தியானம்:** ஆண்டவர் இயேசு சீடர்களிடத்தில் "நீங்கள் என்னை யாரெனச் சொல்கிறீர்கள் ?" என்று கேட்கும் போது பேதுரு மறுமொழியாக, "ஆண்டவரே நீர் மெசியா வாழும் கடவுளின் மகன் (மத்16:16)என்று சொன்னதினால் இயேசு அவரை திருச்சபையின் தலைவராக ஏற்படுத்தி எல்லா அதிகாரங்களையும் அவருக்கு கொடுக்கிறார். இயேசு தன்னுடைய உயிர்ப்புக்கு பிறகு, அவருக்கு தோன்றிய போது "என் ஆடுகளை மேய்" என்று சொல்லி அதனை உறுதி செய்கிறார் (யோவா21:15-18). பேதுருவைப் பொறுத்தளவில் உணர்ச்சிப் பெருக்கின் அடையாளமாக இருக்கிறார். அவசரப்பட்டு ஏதாவது பேசுவார் .பின்னர் அவர் பேசிய வார்த்தைகளை அவரே மீறுவார். எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்த பேதுரு தான் பின்னாளில் "ஆண்டவரே உம்மைப்பின்பற்றி வந்த எங்களுக்கு என்ன கிடைக்கும்?" என்று கேட்பார். "எல்லோரும் உம்மை விட்டுப் போனாலும் நான் உம்மை விட்டு போக மாட்டேன்" என்று சொன்னவர், பிறகு இயேசுவை மூன்று மறுதலிப்பார். எனக்கு எதிராக தீங்கு செய்யும் என்னுடைய சகோதரனை எத்தனை முறை மன்னிப்பது ? ஏழு முறையா ?" என்று கேட்டவர் படை வீரனாகிய மால்கு. இயேசுவைக் கைது செய்ய வரும்போது அவருடைய காதைத்துண்டிப்பார். இப்படியாக அவர்பேசிய வார்த்தைகளை அவரே மீறுவார். இருந்தாலும் இயேசுவின் மீது அளவு கடந்த அன்பு அன்பு கொண்டிருந்தார். அவருக்காக உயிரையும் கொடுத்தார். இந்நாளில் நாம் அவர்களைப் போன்று இயேசுவுக்காக நம்மையே முழுவதுமாக தர முன்வருகின்றோமா என சிந்தித்து பார்ப்போம். இயேசு பற்றிய நற்செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவிப்போம்.